

கோவை மாவட்டத்தில் கழகத்திற்காக தனது வாழ்நாட்களை அர்ப்பணித்த தி.மு.கழகத்தின் மூத்த முன்னோடி, கழகத்தை வளர்த்த, மறைந்த அய்யா வெள்ளக்கிணறு வெ.நா.பழனியப்பன் அவர்களின் குடும்பத்தினரை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, துணைச் செயலாளர் அசோக் ஆறுச்சாமி, துடியலூர் கிழக்கு பகுதி கழக பொறுப்பாளர் கே.அருள்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியம் ஆகியோர் உள்ளனர்.

### அமெரிக்காவின் வரிவிதிப்பால் தத்தளிக்கும்

# சிறு - குறு ஜவுளி ஏற்றுமதியாளர்களை மீட்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?

## மக்களவையில் – டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 6-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 02 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பால் தத்தளிக்கும் சிறு குறு ஜவளி ஏற்றுமதியாளர்களின் துயர் துடைக்க ஒன்றிய அரசு ஏதேனும், நடவடிக்கைகளை எடுக்கும் எண்ணம் உள்ளதா? என்றும், திருப்பூர், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்ட ஏற்றுமதியாளர்களின் இன்னல்களை போக்கிடும் வகையில், ஒன்றிய அரசு முன்முயற்சிகள் எடுத்துள்ளதா? என்றும், ஆடை ஏற்றுமதியாளர்களின் வீழ்ச்சியை மீட்க ஏதேனும் செய்ய இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் ஜவளித் துறை இணையமைச்சர் பபித்ரா மொர்கரிட்டா அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் ஜவுளித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு :

கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2025 வரையிலான ஆறு மாத காலத்தையும், அதற்கு முந்தைய ஆண்டினுடன் ஒப்பிடும் போது சிறு குறு ஜவளி ஏற்றுமதியாளர்களின் அமெரிக்க ஏற்றுமதி $5362 லிருந்து $5224 மில்லியன் டாலர்களாக உள்ளது என்றும், மற்ற நாடுகளுக்கான ஏற்றுமதி $12859லிருந்து $13011 மில்லியன் டாலர்களாகவே இருப்பதால், பெரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது என்று கூற இயலாது என்றும், தமிழக சிறு குறு ஜவளி மற்றும் ஆடை ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதி $3975லிருந்து $4078 மில்லியன் டாலர்களாகவே உள்ளது என்றும், திருப்பூர், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள சிறு குறு ஜவளி மற்றும் ஆடை ஏற்றமதியாளர்களிடம் பெரிய வீழ்ச்சி எதுவும் இல்லை என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பை குறித்து ஏற்றுமதியாளர்களிடம் இதுவரை இரண்டு கலந்தாய்வுக் கூட்டங்களை ஒன்றிய அரசு நடத்தியுள்ளது என்றும், மேலும் கீழ் கண்ட பல்வேறு திட்டங்களை ஒன்றிய அரசு நிறைவேற்றி வருகிறது என்று கூறினார்.

பிரதம மந்திரி மித்ரா திட்டத்தின்கீழ் உலகத் தரத்திலான ஜவளி கட்டமைப்புகளுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்றும், சமர்த் திட்டத்தின் படி, திறன் வளர்ப்பு பயிற்களும், வேலை வாய்ப்புகளும் ஜவளித் துறையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்றும், தேசிய கைத்தறி துறையில் உள்ளவர்களுக்கு நிதியுதவியும், தேசிய கைவினை பொருட்கள் மேம்பாடு திட்டத்தின் படி கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் ஒன்றிய அரசு ஆவன செய்து வருகின்றது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், பாராசூட் உற்பத்தியாளர்கள், சிறப்பு ஆடை அமைப்பாளர்கள் ஆகியோருக்கான சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், திருப்பூரிலுள்ள ஜவளி ஏற்றுமதியாளர்களுக்கென பருத்திக்கான இறக்குமதி வரிகளில் சலுகைகள் வழங்கபடுகின்றன என்றும் சேவை மற்றும் சரக்கு வரிகளில் தேவையான சீர்திருத்தங்கள், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்க வழங்கப்படுகின்றன என்றும், வரித்தள்ளுபடிகளின் மூலம் 15000 அதிகமான ஏற்றுபமதியாளர்கள் பயனைந்துள்ளனர் என்றும்,

இந்திய அரசு, ஜவுளித்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 15 நாடுகள், தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை மேற் கொண்டுள்ளது என்றும், 40 நாடுகளிலுள்ள இந்திய தூதரகங்கள் மூலமாக நீடித்த ஏற்றுமதி வளர்ச்சியை உறுதிப்படுத்த தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றும், ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 20,000 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது என்றும்,இதனால் தமிழகத்தின் சிறு குறு ஜவுளி ஏற்றுமதியாளர்கள் பெருமளவில் பயனடைந்துள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் ஜவுளித் துறை இணையமைச்சர் பபித்ரா மொர்கரிட்டா பதிலை அளித்துள்ளார்.

### ஒழுக்கம் – நேர்மை – தொழில் பக்திக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த ஏ.வி.எம்.சரவணன் மறைவு;

# தமிழ்த் திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, டிச. 6 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்தியத் திரையுலகின் மிகச்சிறந்த தயாரிப்பு ஒன்றான நிறுவனங்களில் ஏ.வி.எம். புரொடக்சன்ஸ் நிறுவனத்தின் மேனேஜிங் பார்ட்னர் எம்.சரவணன் (ஏ) ஏ.வி.எம்.சரவணன் அவர்கள் இன்று (04.12.2025) இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயருற்றேன்.

திரையுலகச் சக்கரவர்த்தி மெய்யப்பச் செட்டியார் அவர்களின் புதல்வரான எம்.சரவணன் அவர்கள், தந்தைவழி நின்று ஏ.வி.எம். நிறு வனத்தை மிகச்சிறப்பாக நிர்வகித்து, தமிழ் மட்டுமின்றி இந்தியத் திரையுலகமே வியக்கும் வண்ணம் காலத்தால் அழியாத பல பிரம்மாண்டமான வெற்றித் திரைப் படங்களைத் தயாரித்து அளித்தவர்.

திரைத்துறையில் ஒழுக்கம், நேர்மை மற்றும் தொழில் பக்திக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் அவரது மறைவு தமிழ்த் திரையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழ்த் திரையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.

### டிச.6 முதல் 10–ஆம் தேதி வரை முதியோர் – மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று

# ‘தாயுமானவர்’ திட்டத்தில் ரேஷன் பொருட்கள் விநியோகம்!

## கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தகவல்!

சென்னை, டிச.6–

தாயுமானவர் திட்டத்தில் டிசம்பர் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

இது குறித்து கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சென்னை மண்டலம் பாபு செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், டிசம்பர் மாதத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி. க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 990 நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தெரிவித்துள்ளார்.



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம், திருவிடைமருதூர் ஊராட்சியில் அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த15 குடும்பத்தினர் அக்கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்ச்சியில் தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா குமார், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் மணி எழிலன், மாவட்ட பிரதிநிதிகள் ஆரோக்கியம், மச்சழகன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# தொகுதி, ஒன்றிய, நகர, பகுதி நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் TRB ராஜா அறிவிப்பு!

DMK IT WING

திமுக தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி, ஒன்றிய, நகர மற்றும் பகுதி நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

**மணப்பாறை சட்டமன்ற தொகுதி**

மணப்பாறைதொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.M.தீபா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.M.லதாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மணப்பாறைநகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.M.லதா அவர்கள் தொகுதிஒருங்கிணைப்பாளராகநியமிக்கப்பட்டதால்அவருக்கு பதிலாக திருமதி.M.தீபா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மருங்காபுரி தெற்கு ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.A.சின்ன கருப்பன்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.P.விஜய்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மணப்பாறை ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. விக்னேஷ் குமார்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.N.சண்முகம்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மணப்பாறை ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.N.சண்முகம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.V.ரமேஷ் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மருங்காபுரி வடக்கு ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.N.மீனாட்சி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.ச.கார்த்திகாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி**

மலைக்கோட்டை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. சரவணன்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.அ.செந்தில்குமார்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மலைக்கோட்டை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.S.வெங்கடேஷ்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.நா.சரத்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மார்க்கெட் பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.P.கார்த்திக்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.K.தோஹறிஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மார்க்கெட் பகுதிஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.P.தனலட்சுமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக செல்வி.பாத்திமா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கரை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. க.ரூபானந்த் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.ப.விவேக் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கரை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.V.அருண் குமார்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.க.ரூபானந்த்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கரை பகுதிஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.R.வர்ஷா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக செல்வி.ஜே.சந்தியா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அரியமங்கலம்பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு.S.பார்த்தசாரதிஅவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.ராஜாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அரியமங்கலம்பகுதிஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.புஷ்பலதாஅவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக செல்வி.ச.பர்வீன் பானுஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி**

திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.S.ரேணுகாஅவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.R.சசிகலாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

திருவெறும்பூர் பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.R.கீர்த்தி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.பா.அபிநயாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கூத்தைப்பார் பேரூர்தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. R. கோகிலா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.K.கவிதாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

### திருத்துறைப்பூண்டியில்

# துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## பள்ளிக் குழந்தைகளுக்கு அறுசுவை உணவு, கல்வி உபகரணங்கள் வழங்கல்!

திருவாரூர்,டிச.6–

தமிழ்நாடு துணைமுதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, திருவாரூர் மாவட்டம் முழுவதும் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவணன்எம்.எல்.ஏ. வழிகாட்டுதல்களின்படி எழுச்சியோடு கொண்டாடப்பட்டு வருகிறது.

திருத்துறைப்பூண்டி ஒன்றியப்பகுதி பொன்னிரை ஊராட்சியில், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் என். கே.வெங்கடேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற துணைமுதல்வர் , கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்வுகளில் ,பொன்னிரை குமரன் அரசு உதவிபெறும் துவக்கப் பள்ளி, ஆண்டாங்கரை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி , ஆதனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு அறுசுவை மதிய உணவும், இலவச கல்வி உபகரணங்களும், இனிப்பு பெட்டகங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு மாவட்ட துணை செயலாளர் எம்.ராமகிருஷ்ணன் தலைமை ஏற்றார். மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என்.ராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத்குமார், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் நாகராஜன்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைத்தலை வர் எஸ்.எஸ். அசோகன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கே.ஆர். வெங்கடேஷ் அனைவரையும் வரவேற்றார். மாணவ–மாணவிகளுக்கு மதிய உணவுகளையும், இலவச கல்வி உபகரணங்களையும் பொதுக்குழு உறுப்பினர் செல்வ.ஜெயதேவன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என். கே.வெங்கடேஷ், ஸ்ரீதர், வினோத்,அன்பு.விஷ்வா, ஒன்றியஐ.டி.விங்அமைப்பாளர் சீனி குமார் உள்ளிட்டோர் வழங்கினர். நிகழ்வுகளில் ராஜேந்திரன், பிரசாத், சிவசுப்பிரமணியன், மோகன்தாஸ், ஜெயப்ரகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வீரா (எ) வி.வீரமணி**
**டிசம்பர் 6 (2020)**



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**